18 AUG 2010
...கம், சென்னை -5

**சுருக்கம்**

தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியர் நல உதவி திட்டம் – அங்கீகரிக்கப்பட்ட/ அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் சிறப்பு அறுவை சிகிச்சை – பட்டியலில் இடம்பெறாத சிகிச்சைகள் – மருத்துவ உதவித் தொகை வழங்க – உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நட3) துறை

**அரசாணை(நிலை) எண். 175** நாள் 17.08.2010

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.477, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 30.09.2009.
2. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.14096/MPP(4) /2009, நாள் 07.12.2009.

******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஓய்வூதியதாரர்கள், 2009–ம் ஆண்டைய தமிழ்நாடு ஓய்வூதியதாரர்கள் மருத்துவ நலத்திட்டத்தின்கீழ் மாநிலத்திற்குள் அல்லது வெளிமாநிலத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொள்ளும் தகுதியுடைய மற்றும் தகுதியற்ற சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவித் தொகையினை வழங்க, நிபந்தனைகளுக்குட்பட்டு ஓய்வூதிய இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மருத்துவ நல உதவி வழங்குவது குறித்து பெறப்பட்ட பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகளில், சிகிச்சை அளித்தல் என்பது சம்பந்தப்பட்ட மருத்துவரின் விருப்பம் என்றும் இதில், குறிப்பிட்ட முறையில் சிகிச்சை பெற வேண்டும் என்று நோயாளிகளை துறை நிர்பந்திக்கக் கூடாது என்றும், மேலும், ஓய்வூதியதாரர்களுக்கு எந்த மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்வது என்பது குறித்து, எந்த விதமான நிபந்தனைகளையும் விதிக்கக் கூடாது என கருத்து தெரிவித்துள்ளது என தெரிவித்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஓய்வூதியதாரர்கள் மாநிலத்திற்குள் அல்லது வெளிமாநிலத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொள்ளும் தகுதியுடைய மற்றும் தகுதியற்ற சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவித் தொகையினை வழங்க, நிபந்தனைகளுக்குட்பட்டு, ஓய்வூதிய இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணையிட்டதைப் போல, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கும் மேற்படி சலுகையினை ஒப்பளிப்பு செய்ய தமக்கு அதிகாரமளிக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. இப்பொருள் குறித்து அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, 2009–ம்

ஆண்டைய, தமிழ்நாடு ஒய்வூதியதாரர்கள் நலத் திட்டத்தின்கீழ், நகராட்சி ஒய்வூதியதாரர்கள் மாநிலத்திற்குள் அல்லது வெளிமாநிலத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொள்ளும் தகுதியுடைய மற்றும் தகுதியற்ற சிகிச்சைகளுக்கான மருத்துவ உதவித் தொகையினை வழங்க மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.20968/MAWS/2010, நாள் 26.07.2010-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

---

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை –108

நகல்–

நிதி(ஒய்வூதியம்) துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந 2) துறை, சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/8/10
பிரிவு அலுவலர்.
17/08/2010